எங்க நாட்டிலே சொந்த ஊரிலே
எல்லாமே உயிர்த்திருக்கு
அன்னியன் நாட்டிலே அடுத்தவன் வீட்டிலே
எங்க தான் வாழ்விருக்கு
எங்க தான் வாழ்விருக்கு

ஆலமரம் நெஞ்சில நிறைஞ்சிருக்கு அந்த 2
அந்த மாமரம் தான் உள்ளத்தில் கலந்திருக்கு
முற்றத்தில நின்ற வேப்ப மரம் மனசில தான் பூத்திருக்கு
கிணத்தடியிலே வாழைமரம் தலை முறையாய் தவம் கிடக்கு
எங்க நாட்டிலே சொந்த உரிலே எல்லாமே உயிர்த்திருக்கு
அன்னிய நாட்டிலே அவன் வீட்டிலே எங்கதான் வாழ்விருக்கு

அந்த அலமரம் நெஞ்சில நிறைஞ்சிருக்கு

சந்தியிலே புளியமரம் சங்கதிகள் சொல்லுது
குளத்தங்கரை மருத மரம் குளிர் நிலவை தேடுது
நான் குடித்த இளநீர் தென்னை வருந்தி என்னை அழைக்குது 2
வான் உயர்ந்த கரும் பனையோ வா என்று குவுது 2

அந்த அலமரம் நெஞ்சில நிறைஞ்சிருக்கு அந்த

பாலைமரக் கிளைகள் எல்லாம் மஞ்சல' பொளித் தாயுது
வயல் காட்டில் நாவல் மரம் காதல் ஜோடி தேடுது 2
ஆவரசு பூவரசும் கொஞ்சி விழையாடுது 2
செவ்வரத்தம் பூ சிரித்து மண்ணின் கதைபாடுது
செவ்வரத்தம் பூ சிரித்து ஈழ மண்ணை பாடுது
மா......வீரர்களை பாடுது

ஆலமரம் நெஞ்சில நிறைஞ்சிருக்கு அந்த 2
அந்த மாமரம் தான் உள்ளத்தில் கலந்திருக்கு
முற்றத்தில நின்ற வேப்ப மரம் மனசில தான் பூத்திருக்கு
கிணத்தடியிலே வாழைமரம் தலை முறையாய் தவம் கிடக்கு
எங்க நாட்டிலே சொந்த உரிலே எல்லாமே உயிர்த்திருக்கு
அன்னிய நாட்டிலே அவன் வீட்டிலே எங்கதான் வாழ்விருக்கு

எங்கதான் வாழ்விருக்கு எங்கதான் வாழ்விருக்கு எங்கதான் வாழ்விருக்கு

இசைத்தட்டு : மண்ணை தேடும் ராகங்கள்
பதிப்பகம் : அகம்